# அறிமுகம்

## கதறும் பிரசங்கியார்

*நான் வளர்ந்த நாட்டுப் புறத்திலிருந்த ஒரு சிறு சபையில் ஒரு பிரசங்கியார், "கதறும் பிரசங்கியார்" என்று அறியப்பட்டிருந்தார். சகோதரர் நியுட் பென்டில்டன் அவர்கள் பிரசங்கிக்கையில் கண்ணீர் அவரது கண்களில் இருந்து உருண்டோடி வருதல் என்பது சாதாரணமான காட்சியாயிருந்தது. பென்டில்டன் அவர்கள் தமது இருதயத்தில் இருந்து பிரசங்கித்த காரணத்தினால், அவரது பிரசங்கத்தில் எனது தாயார், குறிப்பிடத்தக்க வகையில் விருப்பமாயிருந்தார். தேவனுடைய வசனத்தைச் சில மக்கள் புறக்கணித்ததை அறிந்தது அவருக்குச் சந்தோஷத்தைக் கொண்டுவராதிருந்தது. கீழ்ப்படிதலுக்கான அவரது வேண்டுகோள்கள், மற்றவர்களின் நித்திய நலன் குறித்த உண்மையான அக்கறையிலிருந்து ஏற்படுத்தப்பட்டன.*

*இன்னொரு கதறும் பிரசங்கியார், கிறிஸ்துவுக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்தார். அவரது தந்தையான இல்க்கியா என்பவர், எருசலேமின் வடகிழக்கில் மூன்று மைல் தூரத்தில் இருந்த ஆனதோத் கிராமத்தின் சிறு சமூகத்தில் ஆசாரியக் குடும்பத்தின் உறுப்பினராயிருந்தார்.[1] இந்தக் கதறும் பிரசங்கியார், "தேவன் தாம் துரத்தியவர்களை நிலைநாட்டுகின்றார்" அல்லது "தேவன் எறிகின்றார்" என்று எளிமையாக அர்த்தப்படும், எரேமியா என்ற பெயர் கொண்டு இருந்தார். இந்தப் பெயரானது அவரைத் தேவன் அழைத்திருந்த பணிப்பொறுப்புக்களில் ஒன்றைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம்: "அழிக்கவும், கவிழ்க்கவும் ..." (எரே. 1:10இ).*

*யூதாவிலும் எருசலேமிலும் தேவனுடைய குரலொலியாக இருப்பதற்கு அவருக்கு ஒரு பிரசங்கியார் தேவைப்பட்டார். அடிக்கடி நடந்ததுபோல், தேவன் இம்மனிதரை அவரது தாயின் வயிற்றிலிருந்தே அந்தப் பணிப்பொறுப்பிற்குத் தேர்ந்து கொண்டிருந்தார். எரேமியாவின் புத்தகமானது இந்தக் கதறும் பிரசங்கியார் அழைக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகிறது:*

> *பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகிய இல்க்கியாவின் குமாரன் எரேமியாவினுடைய வசனங்கள்: ஆமோனுடைய குமாரனாகிய யோசியா என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களில், அவன் அரசாண்ட பதின் மூன்றாம் வருஷத்தில் இவனுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. அப்புறம் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களிலும், யோசியாவின்*

*குமாரனாகிய சிதேக்கியா என்கிற யூதாவுடைய ராஜாவின் பதினோராம் வருஷத்து முடிவு மட்டாகவும், எருசலேம் ஊரார் ஐந்தாம் மாதத்தில் சிறைப்பட்டுப்போகும்வரைக்கும் கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று.*

*கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: ''நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன், நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்" என்று சொன்னார் (எரே. 1:1-5).*

*எரேமியா பிறப்பதற்கு முன்பாகவே, அவர் ''ஜாதிகளுக்குத் தீர்க்க தரிசியாய்'' இருப்பார் என்று தேவன் நியமித்தார். தேவன் தாம் விரும்பியதைச் செய்வதற்கு எத்தனைமுறை ஒரு குழந்தையை எழும்பச் செய்திருக்கின்றார்! இன்னமும் இளைஞராயிருந்த எரேமியா, அவரைத் தேவன் தமது செய்தியைப் பிரசங்கிக்கும்படி அழைத்தபோது, இளம் வயதில் இருந்ததாகவே வழக்கமாக நினைக்கப்படுகிறது.*

*முதலில், இந்த தீர்க்கதரிசி, "... ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன், சிறுபிள்ளையாயிருக்கிறேன் ..." என்று கூறி மறுத்தார் (எரே. 1:6). இந்த சாக்குப்போக்கை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனால் அவர், "என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்" என்று உரைத்தார் (எரே. 1:9ஆ). இன்னொரு வேளையில், எரேமியா தம்மேல் கர்த்தர் அதிக பெலத்தால் அவரை மேற்கொண்டார் என்று முறை யிட்டார், அவர் வெளியேறிவிட விரும்பினார்; ஆனால் தேவனுடைய வசனம் அவரது எலும்புகளில் அக்கினிபோல் எரிந்தது, அவரால் அதை நிறுத்த இயலாதிருந்தது (எரே. 20:7-9). அவர் கூறுவதற்கு ஒரு கவலையான கதையைக் கொண்டிருந்தார்.*

*எரேமியா ஏன் அழுதார்? அவரது ஊழியத்தைச் சுற்றிலுமிருந்த வரலாற்றை நாம் பரிசீலனை செய்கையில், மூன்று காரணங்களைக் காணமுடிகிறது.*

## அவரது செய்தி புறக்கணிக்கப்படுதல்

*பிரபலமற்ற ஒரு செய்தியை உரைக்கும்படி எரேமியா அழைக்கப் பட்டார். கவனிக்காதிருக்கும் மக்களுக்குப் பிரசங்கித்தல் என்பது ஊக்கத்தைக் குலைப்பதாக உள்ளது. ஒருவர் பிரபலமாகாமலேயே, சமாதானம் நிறைந்த மற்றும் திருப்தியான வாழ்வை வாழலாம், ஆனால் நீங்கள் தேவனுடைய ஊழியத்தைச்செய்கின்ற காரணத்தால் உங்களை வெறுக்கின்ற மக்களின் சமூகத்தில் வாழ்தல் என்பது கடினமானதா யுள்ளது. வரப்போவதாயிருந்த அழிவின் காரணமாக எரேமியா ஒரு மனைவியையோ அல்லது பிள்ளைகளையோ கொண்டிருக்க வேண்டாம் என்று தேவன் உரைத்தார் (எரே. 16:1-4). செய்யும்படி அவருக்குத் தேவன் கூறிய ஊழியமானது நேர்மறையைவிட அதிகமாக எதிர்மறையாக விவரிக்கப்படுகிறது: "... பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும்" (எரே. 1:10).*

*அழும் தீர்க்கதரிசி யூதேயாவுக்குத் தேவனுடைய குரலொலியாக இருக்கும்படி அழைக்கப்பட்டபோது, யோசியா - யூதாவின் நல்ல அரசர்களில் ஒருவர் - பதிமூன்று ஆண்டுகளாக எருசலேமின் சிங்காசனத்தில் அமர்ந்திருந்தார். மிகவும் இளம்பிராயமான எட்டு வயதிலேயே அரசரான அவர் (2 இரா. 22:1) அந்த வேளையில் இருபத்தியோரு வயதே நிறைந்த வராயிருந்தார். எரேமியா அழைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆன பின்பு, யோசியா எருசலேமில் மதச் சீர்திருத்தங்களைத் தீவிரமாகப் பரப்பத் தொடங்கினார். அவர் தேவாலயத்தைப் பழுதுபார்க்கவும் தேவனுக்கு ஆராதனையை மீண்டும் தொடரவும் பணம் சேகரிக்கத் தொடங்கினார் (2 இராஜா. 22:3-23:25). யோசியா கர்த்தருடைய வசனத்திற்கு மனதைத் திறந்தவராயிருந்தார். அவரும் எரேமியாவும் ஒரேவிதமான நோக்கம் கொண்ட மனிதர்களாய் இருந்தனர்; அவர்கள் தேவன் மீதான அன்பைப் பகிர்ந்து கொண்டிருந்தனர், ஒருவர் மற்றவருடன் நல்ல உறவை மகிழ்வுடன் அனுபவித்தனர். தேவாலயத்தைப் புதுப்பித்துக்கொண்டிருந்த வேலைக் காரர்களால், தேவனுடைய உடன்படிக்கையின் புத்தகம் கண்டறியப் பட்டபோது (2 இரா. 22:8-11), அந்தப் புத்தகத்தின் வார்த்தைகளை, எரேமியா யூதேயா முழுவதிலும் எருசலேமிலும் பிரசங்கிக்கத் தொடங்கினார் (எரே. 11:1-8). யோசியாவின் இருதயத்தைத் தேவனிடமாகத் திருப்புவதில் எரேமியா மாபெரும் செல்வாக்குச் செலுத்தியிருந்தார் என்பதில் சந்தேகமே இல்லை. யோசியா மரித்தபோது, அவரது மரணத்திற்காகப் புலம்பிய எரேமியா, கர்த்தர் மற்றும் யூதாவினிமித்தமான இந்த இழப்பைக் குறித்துப் புலம்பல் ஒன்றை எழுதினார் என்பது தெளிவு (2 நாளா. 35:25).*

*யோசியாவின் மரணத்திற்குப் பின்பு, எரேமியாவின் செய்தியானது யூதாவின் (பின்வந்த) அரசர்களினால் வரவேற்கப்படவில்லை. குறிப்பாக, சிதேக்கியா "கர்த்தருடைய வாக்கை உரைத்த எரேமியா என்கிற தீர்க்கதரிசிக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை" (2 நாளா. 36:12ஆ). தேவன் அதை அவருக்குக் கொடுத்தார் என்ற வகையில் சத்தியத்தை (எரேமியா) தீர்க்கதரிசி பிரசங்கித்த போதிலும், எவரொருவரும் அவரை நம்பவில்லை.*

*யோசியாவின் சீர்திருத்தங்கள் மிகவும் கொஞ்சமானவைகளாக, மிகவும் தாமதமானவைகளாக இருந்தன. யோசியா, இருதயம் இளக்கம் உள்ளவராகவும், கர்த்தருக்கு முன்பாகத் தம்மைத் தாழ்த்தினவராகவும் இருந்த காரணத்தினால், அவர் உயிரோடிருக்கையில் இராஜ்யத்தைத் தேவன் பாதுகாப்பதாக வாக்குத்தத்தம் செய்திருந்தார் (2 இரா. 22:18-20). இருப்பினும், தேவனுடைய கோபம் தணிக்கப்படக் கூடாதபடிக்கு, தேவனுக்கு எதிராக யூதாவின் பாவங்கள் மிகவும் கடுமையானவைகளாய் இருந்தன. யோசியாவின் மரணத்திற்குப் பின்பு துன்பம் வரவிருந்தது (2 இரா. 23:26, 27). இதை அறிந்திருந்த எரேமியா, யோசியாவுக்குப் பின்பு வந்த அரசர்களுக்கு (யோவகாஸ், யோயாக்கீம், யோயாக்கீன் மற்றும் சிதேக்கியா ஆகியோருக்கு) திரும்பத் திரும்ப அதை அறிவித்தார். அவர் சத்தியத்தைப் பேசினாலும், மேட்டிமையான இந்த அரசர்கள் தேவனுடைய வசனத்தைக் கவனிக்கச் சாயாதிருந்தனர் (எரே. 17:19-27). எரேமியா, தமது சொந்த*

*சமூகத்தில் இருந்த மக்களுக்குள்ளேயே, யூதாவுக்கும் அதன் அரசுக்கும் ஒரு விரோதி என்று கருதப்பட்டார் (எரே. 12:6).*

*எருசலேம் தேவாலயத்து முற்றத்தில் பிரசங்கிக்கும்படி எரேமியாவைத் தேவன் அனுப்பினார் என்று நாம் எரேமியா 26ல் வாசிக்கின்றோம். யூதா முழுவதிலுமிருந்து மக்கள் ஆராதிப்பதற்காக அங்கு வந்திருந்தனர். செய்தியை அவர்கள் கேட்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் எரேமியாவின் பிரசங்கத்தைக் கேட்டபோது, அவர்கள் மூர்க்கம் அடைந்தனர். அவர்கள் அவரை மரணத்திற்கு உள்ளாக்கும்படிப் பிடித்தனர் மரணத்தை எதிர் கொண்டிருந்த நிலையிலும்கூட எரேமியா, அவர்களிடத்தில் கர்த்தருடைய வசனத்தைக் கவனிக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். அவரது மனக்கொதிப்பானது அவரது சுயபிரயோஜனத்திற்கானதாக இராமல், அவர்களது பிரயோஜனத்திற்கானதாகவே இருந்தது. அவர் பின்வருமாறு கூறினார்:*

> *நானோவெனில், இதோ, உங்கள் கையில் இருக்கிறேன், உங்கள்பார்வைக்கு நன்மையும் நியாயமுமாயிருக்கிறதை எனக்குச் செய்யுங்கள். ஆகிலும் நீங்கள் என்னைக் கொன்றுபோட்டால், நீங்கள் குற்றமில்லாத இரத்தப்பழியை உங்கள்மேலும் இந்த நகரத்தின் மேலும்இதின் குடிகளின்மேலும் சுமத்திக்கொள்வீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள், இந்த வார்த்தைகளையெல்லாம் உங்கள் செவிகளிலே சொல்லக் கர்த்தர் மெய்யாகவே என்னை உங்களிடத் திற்கு அனுப்பினார் (எரே. 26:14, 15).*

*யூதாவின் பிரபுக்கள் அவரைக் காப்பாற்றவும், கர்த்தருடைய நாமத்தில் பேசும் ஒரு மனிதன் கொல்லப்படக்கூடாது என்று மக்களை நம்பி இணங்கச்செய்யவும் வந்தனர். அவர்கள், எசேக்கியா அரசரின் நாட்களில் மொரேசா ஊரைச் சேர்ந்த மீகா என்பவர் இதேபோன்ற செய்தியொன் றைப் பிரசங்கித்ததை சுட்டிக்காண்பித்தனர். அவரை எசேக்கியா மரணத்திற்கு உட்படுத்தாமல், அதற்குப் பதில் அவருடைய செய்திக்கு செவிகொடுத்திருந்தான் (எரே. 26:16-19).*

*எரேமியா மரணதண்டனை அளிக்கப்படுவதினின்று விடுவிக்கப் பட்டிருந்தாலும், இன்னமும் அவர் ஒரு விரோதியாகவே நடத்தப் பட்டார். சிதேக்கியா அரசரின் அரசாட்சியினுடைய நான்காம் ஆண்டில், எரேமியா, பாபிலோனியரால் யூதேயாவுக்கு ஏற்படவிருந்த தோல்வியை அடையாளப்படுத்தும் வகையில், தமது கழுத்தில் மரத்தினால் ஆன ஒரு நுகத்தை அணிந்தவராகக் காணப்பட்டார். அவர் யூதேயாவைத் சுற்றிலு மிருந்த மற்ற நாடுகளின் அரசர்களுக்கு நுகங்களை அனுப்பி, அவர்கள் பாபிலோனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் அல்லது அழிக்கப்படுவார்கள் என்பதை விவரிக்கும் வகையில் அவர்கள் கழுத்துக்களில் அவற்றை அணிந்துகொள்ளும்படி கூறினார். அவர் அனனியா என்ற கள்ளத்தீர்க்க தரிசியால் எதிர்கொள்ளப்பட்டார், அவரது கழுத்தில் இருந்த மரநுகத்தை,*

அந்த அனனியா முறித்துப் போட்டு, இரண்டு ஆண்டுகளில் யூதேயாவி லிருந்து பாபிலோனின் நுகமானது முறிக்கப்பட்டு போகும் என்று அறிவித் தான் (எரே. 27:1-28:11).

இருப்பினும் எரேமியா, தேவனுடைய செய்தியைத் தொடர்ந்து பிரசங்கித்து, அனனியாவினால் முறிக்கப்பட்ட மரநுகத்திற்குப் பதிலாக இரும்பு நுகம் இடப்படும் என்றும், மக்களைக் கர்த்தருடைய வசனத்திற்கு எதிராகக் கலகம் செய்யும்படி தூண்டிய காரணத்தினால், அந்த ஆண்டிற் குள்ளாகவே அனனியா மரிப்பான் என்றும் முன்னுரைத்தார். எரேமியாவின் முன்னுரைத்தல்கள் உண்மையாயின (எரே. 28:12-17), ஆனால் அரசன், செய்தியை அவர் (எரேமியா) யூதாவிற்கு எதிராகவும் பாபிலோனுக்கு ஆதரவாகவும் இருப்பதாக எடுத்துக்கொண்டார். தீர்க்க தரிசியின் மீது இராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டது மற்றும் அவர் பொது இடங்களில் இனியும் சுதந்திரமாய்ச் செல்ல அனுமதிக்கப் படாதிருந்தார் (எரே. 36:5).

பிற்பாடு எரேமியாவின் வாழ்வில், அவர் தமது தீர்க்கதரிசனங்கள் வாசிக்கப்படும்படிக்கு அவற்றை பதிவுசெய்து வைக்கவேண்டும் என்று அவருக்குத் தேவன் கட்டளையிட்டார். அவரது உண்மை நிறைந்த மாண வரும் வேதபாரகருமான பாருக் என்பவர் எரேமியாவின் தீர்க்கதரிசனங் களை எழுதி அவற்றைக் கர்த்தருடைய ஆலயத்திலே வாசித்தார் (எரே. 36:1-10). அவற்றை தேவாலயத்தில் பாருக் வாசித்த பின்பு, பிரபுக்கள் அவற்றை அவர் தனிப்பட வாசிக்க வேண்டும் என்று விரும்பினர். எரேமியாவின் வார்த்தைகள் பாருக்கினால் வாசிக்கப்பட்டதை அவர்கள் அரசரிடத்தில் கூறுவதற்கு முன்பு, அவர்கள் பாருக்கிடம், எரேமியாவை கூட்டிக்கொண்டுபோய் ஒளிப்பிடத்தில் வைக்கும்படியும், அவர் எங்கிருக்கின்றார் என்பதை ஒருவருக்கும் கூறாதிருக்கும்படியும் சொன்னார்கள் (எரே. 36:11-19).

எரேமியாவின் செய்தியானது, யோயாக்கீம் அரசரிடத்தில் வாசிக்கப்பட்டபோது, அந்த அரசர் தமது குளிர்கால அரண்மனையில், நெருப்பு எரியும் இடத்தில் ஒரு நெருப்புக்கு எதிரே அமர்ந்திருந்தார். தோற்சுருளில் இரண்டு அல்லது மூன்று பத்திகள் வாசிக்கப்பட்ட பின்பு, அரசர் அந்தத் தோற்சுருளை வேதபாரகரின் கத்தியால் வெட்டி அந்தத் துண்டுகளை எரியும் நெருப்பில் வீசி எறிந்துவிட்டார். தோற்சுருள் முழுவதும் நெருப்பில் எரிக்கப்படும் வரையில் அவர் இதை தொடர்ந்து செய்தார் (எரே. 36:20-23). பின்பு அரசர், பாருக்கையும் எரேமியாவையும் கைது செய்யும்படி கட்டளையிட்டார், ஆனால் அவர்களைக் கண்டறிய இயலாதிருந்தது. அதே வேளையில், கர்த்தர் எரேமியாவிடம் மீண்டும் சில கூடுதலான விஷயங்களுடன் தோற்சுருளில் எழுதும்படி கூறினார் (எரே. 36:27-32).

மிக விரைவிலேயே, யோயாக்கீமைப் பற்றி எரேமியா கூறிய வசனங்கள் நிறைவேறின. நேபுகாத்நேச்சார் என்ற பாபிலோனிய மன்னன் எருசலேமுக்கு வந்து, யோயாக்கீமைத் தனக்குக் கீழ்ப்பட்ட அரசனாக்கினான். மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு, யோயாக்கீம் நேபுகாத்நேச்சாருக்கு எதிராகக் கலகம் செய்தார். பாபிலோனியப்

*படையானது எருசலேமின்மீது படையெடுத்து வந்து, யோயாக்கீமை அடிமையாகப் பிடித்துச் சென்றது. அவரது இளையமகன் யோயாக்கீன் தனது தந்தைக்குப் பதிலாக அரசராக நியமிக்கப்பட்டார், ஆனால் அவர் மூன்று மாதங்களும் பத்து நாட்களும் மாத்திரம் அரசாண்டார். அவரையும் நேபுகாத்நேச்சார் சிறைப்பிடித்துச் சென்றார், பின்பு எருசலேமில் சிதேக்கியா என்பவரை அரசராக நியமித்தார் ( 2 நாளா. 36:8-10).*

*அரியணைக்கு வந்தபோது இருபத்தியோரு வயதே ஆகியிருந்த சிதேக்கியா, எரேமியாவிடத்தில் யோயாக்கீம் கொண்டிருந்ததுபோல் அவ்வளவு வெறுப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பிரபுக்களும், ஆசாரியர்களும் மற்றும் பிற தீர்க்கதரிசிகளும் எப்போதும் போலவே வெறுப்புணர்வுடன் இருந்தனர். அவர்கள் தொடர்ந்து, பாபிலோனுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டிக்கொண்டு, நேபுகாத்நேச்சாருக்கு எதிராகத் தங்களுக்கு ஆதரவளிக்க எகிப்து நாடு வரும் என்று நம்பியிருந்தனர். தேவன் யூதாவைச் சிட்சிக்கத் திட்டமிட்டிருப்பதால், எகிப்து நாட்டுடன் ஒப்பந்தத்தை நாடவேண்டாம் என்று மக்களிடத்தில் எரேமியா கேட்டுக்கொண்டபோது, அவர்கள் எரேமியா விரோதியின் பக்கம் இருப்பதாகக் கருதினர்.*

*ஒருநாள், எரேமியா தமது மக்கள் மத்தியிலிருந்த தமது உடமை யொன்றை உரிமை கோருவதற்காகத் தமது சொந்த ஊருக்குத் சென்று கொண்டிருக்கும்போது, யூதேயப் படையின் காவற்சேவைக்கு அதிபதியா யிருந்த ஒருவர், எரேமியா கல்தேயருக்கு ஆதரவாகப் பேசுவதாக அவர்மீது குற்றம்சுமத்தி, அவரை நிலவறையில் இருந்த காவற்கிடங்கில் போடு வித்தான், அங்கே அவர் பலநாட்களாக அடைக்கப்பட்டுக் கிடந்தார் (எரே. 37:11-16).*

*சிதேக்கியா எரேமியாவுக்கு சாதகமாய் இராதிருப்பினும், தனக்குக் கர்த்தரிடமிருந்து வந்த வார்த்தை எதையேனும் எரேமியா கொண்டுள் ளாரா என்று அறிய ஆர்வமாயிருந்தார். அவர் எரேமியாவைச் சிறை யினின்று விடுவித்து அவரைக் காவற்சிறையின் முற்றத்தில் காவல் காக்கும்படி நியமித்தார் (எரே. 37:17-21). கடைசியில் யூதாவின் கலகத்திற்கு முடிவுகட்டும்படிக்கு பாபிலோன் வந்தபோது, மக்கள் கீழ்ப்படிய வேண்டும் என்றும், அவர்கள் பெறவிருந்தது அவர்களுக்குக் தகுதியான தாகவே இருந்தது என்றும், மற்றும் அவர்கள் தேவனுடைய சிட்சையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் மீண்டும் வலியுறுத்தினார். இந்த தீர்க்கதரிசியைப் பிரபுக்களில் சிலர் கொலை செய்விக்க வேண்டும் என்று விரும்பினர், அவர்கள் அவர் கொடுத்த செய்தியானது மக்களின் ஊக்கத்தை குலையச் செய்து துன்பம் தருவதாயிருந்தது என்று நம்பினர். அவர்கள் எரேமியாவை, தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்த ஒரு துரவில் போட்டார்கள். அவர்கள் எரேமியாவை, கயிறுகளைக்கொண்டு அந்த உளைக்குள் இறக்கினார்கள், அவரின் பாதங்கள் சேற்றில் அமிழ்ந்தன (எரே. 38:1-6).*

*எரேமியாவின் மீது பரிவிரக்கம் கொண்ட, எத்தியோப்பிய வேலைக்காரனான எபெத்மெலேக் என்பவர், அந்த குழியிலிருந்து*

எரேமியாவை விடுவிக்கும்படிக்கு அரசரிடம் வற்புறுத்தி வேண்டிக் கொண்டார், அவ்வாறு விடுவிக்காவிட்டால் எரேமியா இறந்துபோவார் என்றும் அவர் கூறினார். அவர் குழியிலிருந்து எடுக்கப்பட்டு மீண்டும் காவல் முற்றத்திற்குத் திரும்பினார், அங்கே அவர் அந்த நகரம் பிடிக்கப் பட்டுபோகும் வரையிலும் இருந்தார் (எரே. 38:7-13).

## எருசலேமின் அழிவு

எரேமியா, தேவனுடைய மக்களும் எருசலேமும் விழுந்துபோவதைக் காணவிரும்பவில்லை. எரேமியாவைப் பற்றிப் பரவலாக இருந்த கருத்திற்கு மாறாக, அவர் யூதாவின் மக்கள் மீதும் எருசலேம் நகரின்மீதும் அன்பு கூர்ந்திருந்தார். வரவிருந்த அழிவைப் பற்றி அவர் அறிவித்த அறிவிப்பானது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை, அவர் தமது நாற்பது ஆண்டுப் பிரசங்க வாழ்வில் பல கண்ணீர் உரைகளைக் கதறியிருந்தார். மக்கள் தேவன் கூறுவதை கவனிக்காதபடியினால் பேரழிவு வரும் என்று அவர் அறிந்திருந்தார்.

எருசலேமின் வீழ்ச்சி பற்றிய வரலாறு 2 இரா. 25, 2 நாளா. 36 மற்றும் எரேமியா 39 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது. பாபிலோனின் இராஜாவான நேபுகாத்நேச்சார் எருசலேமைச் சுற்றிவளைக்கத் தனது படைகளைக் கொண்டுவந்தான். எவரொருவரும் நகருக்குள் நுழையவோ அல்லது நகரத்தை விட்டு வெளிவரவோ இயலாதிருந்தது. நகரத்தில் இருந்த உணவு தீர்ந்துபோனபோது, யூதப்படையானது சிதேக்கியா இராஜாவுடன் சேர்ந்துகொண்டு, தப்பிச்செல்லும் முயற்சியாக இரவு வேளையில் நகர மதிலை உடைத்துச் செல்ல முயன்றது. நேபுகாத்நேச்சாரின் சேனைகள், எரிகோவின் சமனான வெளியில் சிதேக்கியா இராஜாவைப் பிடித்துக்கொண்டு அவரது படையைச் சிதறடித்தன. சிதேக்கியாவும் அவரது மகன்களும் மற்றும் சிறைப்பிடிக்கப்பட்டவர்களும் ரிப்லா என்ற இடத்தில் நேபுகாத்நேச்சாருக்கு முன்பு கொண்டுவரப்பட்டனர், அங்கே அவர்கள் மீது தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அரசர் தமது மகன்கள் கொலை செய்யப்படுகையில் அதைப் பார்க்கும்படி வற்புறுத்தப்பட்டார்; பின்பு அவரது கண்கள் பிடுங்கப்பட்டன. அவர் வெண்கல விலங்கிட்டு பாபிலோனுக்கு இழுத்துச் செல்லப்பட்டார்.

பிற்பாடு, நேபுகாத்நேச்சாருடைய காவல்சேனையின் அதிபதி எருசலேமுக்கு வந்து அங்கிருந்த எல்லாவற்றையும் அழித்தான். அவன் தேவாலயத்திலிருந்த விலையுயர்ந்த பொருட்களை எடுத்து அவற்றை பாபிலோனுக்கு அனுப்பி வைத்தான். அவன் கட்டிடங்கள் யாவற்றையும் துண்டுதுண்டாக்கி அவற்றைக் குப்பையாகக் குவித்தான். எரியக்கூடிய யாவும் நெருப்பில் இடப்பட்டன, அதில் தேவாலயமும், அரசர் மற்றும் எருசலேமின் அதிகாரிகளுடைய வீடுகளும் உள்ளடங்கின. அவன் சுவர்களை இடித்து, மக்களைச் சிறைப்பிடித்து, அவர்களை பாபிலோனுக்கு அடிமைகளாக அனுப்பினான். நிலங்களிலும் திராட்சத்தோட்டங்களிலும் வேலைபார்க்கும்படிக்கு ஒருசில ஏழைமக்கள் மாத்திரமே விடப்பட்டனர்.

ஒருகாலத்தில் இஸ்ரவேலின் பெருமைக்குரிய ஆபரணமாய் இருந்த யூதா, தான் எந்த மக்களிடத்தில் இருந்து ஆதரவைப் பெற்றுக் கொண்டிருந்ததோ, அதே மக்களால் வெறுக்கப்படவும், இழுத்துச் செல்லப்படவும், அவர்களின் தேவர்களை மதிக்க வேண்டியதும் ஆயிற்று. யூதா நாட்டில், ஒருகாலத்தில் மும்முரமான வியாபார மையமாகவும் மத மையமாகவும் இருந்த எருசலேம் நகரம், சாம்பல் குவியலாகக் கிடந்தது. எது ஒருபோதும் நடக்க முடியாது என்று மக்கள் நினைத்திருந்தனரோ, அதுவே நடந்திருந்தது.

எருசலேமைப் பிடித்தபின்பு, பாபிலோனியர்கள் எரேமியாவைச் சிறையினின்று விடுவித்து அவரை மரியாதையுடன் நடத்தினர் (எரே. 39:11-14). அவர்களின் அரசிற்குச் சாதகமாக அவர் பேசியிருந்தார் என்பதை அவர்கள் அறிந்தனர். அவர் பாபிலோனுக்கு செல்லுவதா அல்லது அங்கேயே தங்கியிருப்பதா என்பதை அவரே விரும்பித் தேர்ந்து கொள்ளும்படி விட்டுவிட்டனர் (எரே. 40:4, 5). அவர் தமது சொந்த நாட்டில் இருப்பதை விரும்பித் தேர்ந்துகொண்டார்.

## யூதா மக்களின் நிலைமை குறித்து அவரது ஆழ்ந்த கருத்து

அழிவிற்கு பின்பு தேவன் எரேமியாவிடத்தில், அவர் கண்டதையும் அவர் உணர்ந்ததையும் எழுதுமாறு கூறினார். புலம்பல் புத்தகம் முழுவதிலும், அது கண்ணால் கண்ட சாட்சியொருவரால் எழுதப்பட்டது என்பதற்கான ஆதாரத்தை நாம் காணுகின்றோம். அழிவு வந்து ஒரு சிலமணி நேரத்திற்குள்ளாகவே, எரேமியா அழிவுகளினூடே நடந்து சென்றிருக்க வேண்டும். மரித்தவர்கள் தெருக்களில் கிடந்ததையும் தாம் வளர்ந்த மற்றும் நேசித்திருந்த நகரமானது பெரும் கற்குவியலாய்க் கிடந்ததையும் நிச்சயமாகவே அவர், கண்ணீர்களினூடே கவனித்திருக்க வேண்டும்.

நம்பிக்கையின்மை மற்றும் உதவியின்மை ஆகியவற்றினால் ஆன அவரது உணர்வுகள், அவநம்பிக்கையின் ஏக்கப் பெருமூச்சுகளினால் வெளிப்படுத்தப்பட்டன. யூதா தேசமானது தான் வணங்கிக் கொண்டிருந்த மற்ற தேவர்களிடத்திற்குத் தனது தேவனாலேயே திருப்பப்பட்டிருந்தது. பொய்யான தேவர்கள் தேவையான வேளைகளில் உதவ முடியாது என்ற வேதனை நிறைந்த பாடத்தை யூதா கற்றுக்கொண்டது.

என்ன நடக்கும் என்று மக்களிடத்தில் எரேமியா கூறமுயன்றிருந்தும் அவர்கள் கவனிக்காது இருந்து விட்டார்கள் என்பதினால் எரேமியாவின் வருத்தம் அதிகரித்தது. அது நடந்திருக்கத் தேவையேயில்லை என்று அவர் அறிந்திருந்தார். அவர்கள் தேவன் கூறியவற்றைக் கவனிக்க மறுத்ததினால், தங்களுக்கு உதவுவதற்கு எகிப்தையும் மற்ற நாடுகளையும் நம்பிக்கொண்டிருந்ததினால் அழிவு வந்திருந்தது. யெகோவா தேவன்தான் உண்மையான ஒரே தேவன் என்பதை அவர்கள் விசுவாசிக்க மறுத்ததால் அது (துன்பம்/அழிவு) வந்திருந்தது. புலம்பலின் புத்தகமானது, அழுகையின் புத்தகமாக, கிறிஸ்து இந்த உலகத்தில் பிறப்பதற்கு 585 ஆண்டுகளுக்கு

*முன்பாக யூதா மற்றும் எருசலேமின் மீது விழுந்த பெருந்துன்பத்திற்கான இரங்கற்பாடலாக உள்ளது. எரேமியாவின் பின்வரும் வார்த்தைகளை கவனியுங்கள்:*

> *ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும், அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும்பகலும் அழுவேன். ஆ, வனாந்தரத்தில் வழிப்போக்கரின் தாபரம் எனக்கு இருந்தால் நலமாயிருக்கும், அப்பொழுது நான் என் ஜனத்தைவிட்டு, அவர்களிடத்தில் இராதபடிக்குப் போய்விடுவேன். அவர்களெல் லாரும் விபசாரரும் துரோகிகளின் கூட்டமுமாயிருக்கிறார்கள் (எரே. 9:1, 2).*

## *செய்தி என்ன?*

*நீங்கள் எப்போதாவது எரேமியாவைப்போல் உணர்ந்திருக் கின்றீர்களா? ஒருவேளை நீங்கள் தேவன் கூறுவதைக் கவனிப்பதற்கு, அவருக்காக வாழ்வதற்கு, மற்றும் அவரது செய்தியை அறிவிப்பதற்கும் உங்களால் இயன்ற அளவுக்குத் சிறப்பாக முயற்சிசெய்திருக்கலாம், ஆனால் தோல்வி மற்றும் ஏமாற்றம் ஆகியவற்றின் கருத்தையே சந்தித்திருக்கலாம். நீங்கள் குறிப்பிடத்தக்கவராயிராமல் மற்றும் செயல்விளைவு அற்றவராயிருப்பது போல் உணரலாம். உங்கள் அர்ப்பணித்தலுக்காக மற்றவர்கள் உங்களை இழித்துரைத்து, உங்களை ஒரு பைத்தியக்காரர் போல் அல்லது அலட்சியப்படுத்துதல் என்ற பிரச்சினையைக் குறித்து நீங்கள் அளவுக்குமீறி செயல்படுவதுபோல் நடத்தலாம். அமைதியாயிருக்கும்படி இழித்துரைக்கப்பட்ட நிலையில், நீங்கள் உங்கள் சிந்தைனைகளுடன் தனித்திருக்கும்படி விடப்பட மாத்திரம் விரும்புவீர்கள்.*

*மரணம் நேரிடும் என்ற அச்சுறுத்தலில் கூட, தமது உண்மைத் தன்மையைப் பராமரித்த எரேமியாவை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தேவன் இன்னமும் கட்டுப்பாடு செலுத்துகின்றார், மற்றும் அவரது நோக்கங் கள் எரேமியாவின் நாட்களில் இருந்தது போன்றே இன்னமும் இருக்கின் றன. தேவன் நம்மை ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக ஏற்படுத்தினார். அவர் தமது சாயலாக நம்மை உருவாக்கி, தாம் வாழ்வதற்கென்று ஒரு வாசஸ்தலத்தை நமக்குள்ளாக உண்டாக்கினார். தமக்காகப் படைத்து இருக்கின்ற நமது இருதயத்திலுள்ள இந்த விசேஷித்த இடத்தில் வாசம் பண்ண விரும்புகின்றார். நமது சரீரங்கள் அவரது ஆலயமாய் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார் (1 கொரி. 6:19, 20; எபே. 2:21, 22).*

*தேவன் ஒரு இலகுவான வாழ்வுக்காக நம்மை அழைப்பதில்லை, அவர் நம்மை, சிலுவைக்கு, அவமானம் மற்றும் ஏளனம் ஆகியவற்றிற்கு அழைக்கின்றார். நமது வாழ்வில் அவர் மேன்மையடையும்படிக்கு, நாம் சுயத்தை மறுக்க வேண்டும் என்று அவர் நம்மை அழைக்கின்றார். இயேசுவின் சீஷர்கள் உலகக் காட்சிகளில் ஒன்றுகலந்து, கவனிக்கப்படாத வர்களாய்ப் போய்விடுவதற்காக அவர் சிலுவையில் மரிக்கவில்லை. நீதியின்*

பாதை என்பது எப்போதுமே, “குறைவாக பயணம் செய்யப்பட்ட சாலை”யாகவே இருந்திருக்கிறது. அவருக்கு ஊழியம் செய்வதற்கான விலை என்பது எப்போதுமே நாம் சுமக்கக் கூடியதற்கு அதிகமானதாகவே உள்ளது போலக் காணப்படுகிறது. இருப்பினும் முடிவில், அவருக்கு ஊழியம் செய்யாதிருத்தலுக்கு இன்னும் அதிக விலை செலுத்த வேண்டியிருக்கும். தேவனுடைய வழியைத் தேர்ந்து கொள்வதற்கு எரேமியா செலுத்திய விலையானது, கலகம் மற்றும் விக்கிரகாராதனைக்கு யூதா செலுத்திய விலையைக்காட்டிலும் மிகவும் குறைவாகவே இருந்தது.

ஒருவேளை நீங்கள் அதிகமாக, யூதாவைப் போல் இருக்கலாம் - தேவன் என்ன கூறுகின்றார் என்பதைக் கேட்டும் கேளாதவர்களாயிருக்கலாம். நீங்கள் தேவனுடைய பிரசன்னத்தைக் காட்டிலும் பாவத்தின் சந்தோஷத்தை அதிகமாய் விரும்பித் தேர்ந்து கொண்டீர்களா? நீங்கள் ஒருவேளை, அபாயமான விளைவைப் பற்றி உணர்ந்தறியாமலேயே அதன் முன்னிலையில் நின்றுகொண்டு, ஆவிக்குரிய சீரழிவில் மறைவாய் இழுபட்டுக் கொண்டிருக்கலாம். நீங்கள் சத்தியம் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்டும் அதை விசுவாசிக்கும்படிக்கு உங்களைக் கொண்டுவரக்கூடாத வராயிருக்கலாம். நாம் கேட்க விரும்புவதைப் பிரசங்கிக்கின்றவர்களைக் கவனித்தல் என்பது சத்தியத்தை எதிர்கொள்வதைவிட எப்போதுமே சுலபமானதாக உள்ளது.

இன்றைய நாட்களில் மக்கள், கல்வி, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியவை நமது உலகப்பிரகாரமான, சமூகரீதியான மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் என்று நினைக்க விரும்புகின்றனர். தேவன் இல்லையேல் மனிதர்கள் தாங்கள் எவ்வளவு ஞானம் அல்லது கல்வியறிவைப் பெற்றிருந்தாலும் அதினால் மேன்மையடைய முடியாது என்பதே உண்மையாக உள்ளது. கல்வி, ஆராய்ச்சி, மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை உதவிகரமாக இருக்கலாம், ஆனால் இந்த பூமியில் தேவனில்லாது நம்மால் வாழ்வின் தரத்தை மேம்படுத்த முடியாது. பொருள் உடைமைகளை ஆராதித்தல் என்பது சுய அழிவாக உள்ளது. மக்கள் எதை ஆராதிக்கின்றார்களோ அவர்களும் அதைப்போலாகின்றார்கள். ஒருவர் உடமைகளை ஆராதிக்கின்றபோது, அவரது ஆவி சுருங்குகிறது மற்றும் அது தேவனுடைய உண்மைத் தன்மையின் தொடுதல் இன்றி இழந்துபோகப்படுகிறது.

பவுல் தமது நிருபங்களில், தங்களை ஞானியென்று நினைத்தும் மதியீனராக இருந்த மக்களை பற்றி எழுதினார் (ரோம. 1; 1 கொரி. 2). அவர்கள் தேவனுடைய மகிமையை மனிதர்கள் மற்றும் விலங்குகளின் உருவங்களுக்கு மாற்றினார்கள். அவர்கள் தங்களுக்குப் பொருத்தமான வகையில் தேவனுடைய செய்தியை மாற்றிக்கொள்ளும்படிக்குத் தங்கள் சுயாதீனத்தைக் கையாண்டனர். ரோமர் 1ல் பவுல், “தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்” என்று மூன்று முறைகள் (வசனங்கள் 24, 26, 28) கூறினார். மக்கள், தேவனுக்குப்பதிலாக வைக்கும்படி தாங்கள் தேர்ந்து கொண்ட வாழ்வின் ஒரு வழிக்கு அல்லது தேவர்களுக்கு அவர்களைத் தேவன்

ஒப்புக்கொடுக்கும்போது, அவர்கள் இழந்துபோகப்பட்டு தாங்கள் இழந்துபோகப்பட்ட நிலையில் இருப்பதை உணர்ந்தறிவதும் இல்லை.

கர்த்தருடைய வசனத்தைக் கவனிக்க வேண்டிய அவசரத் தேவையுள்ள வேளையென்று எப்போதேனும் ஒருவேளை இருக்குமென்றால், அது இந்த வேளையே ஆகும். நாம் தேவன் கூறுவதைக் கேட்பதற்கு இன்னும் ஏராளமான வேளை இருக்கிறது என்றோ, அல்லது அவர் கூறுவதைப் பிற்பாடு கேட்பது மிகவும் வசதியாக இருக்கும் என்றோ நினைப்பது மிகவும் சுலபமாக உள்ளது. மக்கள் சுலபமாக வஞ்சிக்கப்படுகின்றனர். நாம், கேட்க விரும்புபவற்றைக் கேட்கவும் நமக்கு பிரியமற்ற எதையும் வடிகட்டி விட்டுவிடவும் எப்போதும் விரும்புகின்றவர்களாய் இருக்கின்றோம்.

1965ல், சில்லி நாட்டின் கடற்கரையில் இருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் தள்ளி, கடலுக்குள் ஏற்பட்ட ஒரு பூமியதிர்ச்சியானது கடலில் மாபெரும் ஆழிப்பேரலைகள் எழும்பக் காரணமாயிருந்தது. அந்த அலையானது கடற்கரையை அடைவதற்குப் பலமணி நேரங்கள் ஆயிற்று. கரையோரத்தில் குடியிருந்தவர்கள் மேட்டுப்பகுதிக்குத் தப்பிச் சென்று விடும்படி அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். அலை கடந்துசென்ற பின்பு, முப்பத்து இரண்டு பேர் இறந்துபோனதாகவும், இருபத்தி ஏழு பேர் காணாமற்போனதாகவும் அறிக்கை தரப்பட்டது. United Press International என்ற நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளரான ஜார்ஜ் ஈகிள் என்பவர், “இதில் எவருமே உண்மையில் இறந்துபோயிருக்க அவசியமே இல்லை. அவர்கள் வெகுநேரத்திற்கு முன்பாகவே எச்சரிக்கை செய்யப்பட்டனர்; அவர்கள் அந்த எச்சரிக்கைக்குப் பதில் செய்யவில்லை, அவ்வளவே” என்று கூறினார்.

நாம் சத்தியத்தைப் புறக்கணித்தல் அல்லது பிற்பாடு கவனிக்க நமக்கு நேரம் உள்ளது என்று நினைத்தல் ஆகியவற்றைச் செய்யாதிருப்போமாக. மாறாக, பவுலின் பின்வரும் புத்திமதிக்குச் செவிகொடுப்போமாக:

> “இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சண்யநாள்” (2 கொரி. 6:2).

---

## புலம்பலின் பாணி மற்றும் பொருளடக்கம் ஆகியவற்றின் பண்புகள்

புலம்பலின் புத்தகம் நினைவில் கொண்டிருக்கும்படி எழுதப்பட்டது. நாம் இதன் பாணி மற்றும் பொருளடக்கம் ஆகியவற்றின் மறக்க இயலாத பண்புகளை ஆழ்ந்து சிந்திப்போம்,

*புதிர்க் கவிதை ஏற்பாடு.* புலம்பலின் புத்தகம் ஐந்து கவிதைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் நான்கு கவிதைகள் புதிர்கவிதை வடிவில் உள்ளன. அதாவது ஒவ்வொரு வசனமும் வித்தியாசப்பட்ட ஒரு எபிரெய எழுத்துடன் தொடங்குகிறது, இது அகரவரிசையில் வளருகிறதாய் உள்ளது. அதிகாரங்கள் 1, 2 மற்றும் 4 ஆகியவை இருபத்தியோரு வசனங்களைக்

கொண்டுள்ளன, ஒவ்வொரு வசனமும் எபிரெய அகரவரிசையின் ஒவ்வொரு எழுத்துக்குமானதாக உள்ளது. அதிகாரம் 3, ஒவ்வொரு எழுத்திற்கும் மூன்று வசனங்களை - மொத்தம் அறுபத்தியாறு வசனங்களை - கொண்டுள்ளது. அதிகாரம் 5, இருபத்தி இரண்டு வசனங்களைக் கொண்டுள்ளது, ஆனால் இது அகர வரிசையில் அமையவில்லை.[1] புதிர்க் கவிதைப் பாணி என்பது மனப்பாடம் செய்வதற்கு ஒப்புவிக்கப்பட்டது என்று அர்த்தப்படுத்தும் ஏற்பாடுகளில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அகரவரிசை முறையைப் பின்பற்றுதல் என்பது மக்கள் ஒவ்வொரு வரியையும் நினைவுபடுத்திக்கொள்ள உதவிற்று.

*வழக்கத்திற்கு மாறான தலைப்பு.* மூலபாஷையான எபிரெயு மொழியில், “எப்படி!” என்று அர்த்தப்படுகிற *ekah* என்ற வார்த்தையே இந்தப் புத்தகத்தின் தலைப்பாக உள்ளது. இது 1:1 (மேலும் 2:1 மற்றும் 4:1 ஆகியவற்றின்) முதல் வார்த்தையில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. யூதப் பாரம்பரியமானது இந்தப் புத்தகத்தின் பாடக்கருத்தில் இருந்து இதற்கான தலைப்பை எடுத்து, அதை “புலம்பல்” என்று அர்த்தப்படுகிற *qinot* என்று குறிக்கிறது.[2]

*உலகளாவிய பொருத்தத் தன்மை.* இன்றைய நாட்களில் வேதாகம மாணவர்களுக்கு, இது மிகவும் குறைவாக அறியப்பட்ட புத்தகமாக, இதன் செய்தி பொருத்தமற்றதாய் தோன்றுவதாக இருக்கலாம். ஆயினும், எபிரெய சமூகம் இதனை மனப்பாடம் செய்ய ஒப்புகொடுத்திருந்தது! இன்றைய நாட்களில் யூதர்கள் இன்னமும் இதை, ஆப் மாதத்தின் ஒன்பதாம் நாளில் மனப்பாடமாய் ஒப்புவிக்கின்றனர் அல்லது சத்தமாய் வாசிக்கின்றனர். ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, கி. மு. 586ல் அதே நாளில்தான் எருசலேமும் தேவாலயமும் அழிக்கப்பட்டன, மற்றும் கி. பி. 70லும் அதே நாளில்தான் ஏரோதின் தேவாலயமும் அழிக்கப்பட்டது.[3]

ஒரு நாடு தேவனுக்கு மீண்டும் மீண்டும் தனது முதுகைத் திருப்பிய போது அந்த நாட்டிற்கு என்ன நடந்தது என்பது பற்றிய மிகச் சிறந்த விவரித்தலைப் புலம்பலின் புத்தகம் தருகிறது. இந்தப் புத்தகம் காலங்கள் தோறும் வாசிக்கப்படவும் நினைவுபடுத்தப்படவும் வேண்டும் என்று தேவன் அர்த்தப்படுத்தினார். தேவனைக்குறித்து அலட்சியப்படுத்துகின்ற வர்களுக்கும் தங்கள் வாழ்வில் எச்சரிக்கையற்று இருப்பவர்களுக்கும் இது ஒரு விழித்தெழுப்பும் அழைப்பாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]Anthony Lee Ash, *Jeremiah and Lamentations*, The Living Word Commentary, ed. John T. Willis (Abilene, Tex.: ACU Press, 1987), 331-32. [2]Kenneth Barker, ed., “Introduction,” *The NIV Study Bible*, 10th ed. (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1995), 1579. [3]Ibid.